# கருணாநிதியைக் கொல்ல புலிகள் திட்டமாம்!


விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 18 இதழ் 229
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 4 — 10 — 1993


## அவரே கூறுகிறார்

(சென்னை)
தன்னை கொலை செய்ய விடுதலைப்புலிகள் திட்டமிட்டு வருகிறார்கள் என தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி நேற்று சென்னையில் தெரிவித்துள்ளார்.
தி. மு. க. தலைமைப் பதவியை தன்னிடமிருந்து
(4-ம் பக்கம் பார்க்க)

### பல்கலைக்கழக மேலதிக அனுமதி
## வெட்டுப்புள்ளி அடுத்த வாரம்

(கொழும்பு)
அடுத்த ஆண்டு பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்கப் படும் மேலதிக தொகுதி மாணவர்களுக்கான 'வெட்டுப் புள்ளி' விபரம் அடுத்த வார இறுதிக்குள் அறிவிக்கப்பட வுள்ளது.
கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த. (உயர் தரம்) பரீட்சைப்
(4-ம் பக்கம் பார்க்க)

### ● கிளாலிப் பகுதியில் கண்ணிவெடி
# இரு கவச வாகனங்கள் சிதறின
# 5 ராணுவம் பலி; நால்வர் காயம்

### முன்னேறும் முயற்சி முறியடிப்பு

(யாழ்ப்பாணம்)
கிளாலி - அல்லிப்பளைப் பகுதியில் விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் இரவு மேற்கொண்ட கண்ணிவெடித் தாக்குதலில், இரண்டு கவச வாகனங்கள் சிக்கிச் சிதறியதுடன் ஐந்து இராணுவத்தினர் உயிரிழந்தனர். நால்வர் படுகாயமடைந்தனர்.
(4-ம் பக்கம் பார்க்க)

## கிளாலிப் பகுதியில் இருந்து ராணுவம் வெளியேறும் நிலை!

(கொழும்பு)
கிளாலிப் பகுதியில் தொடர்ந்தும் நிலைகொள்வதா அல்லது அங்கிருந்து வெளியேறி மீண்டும் ஆனையிறவுக்குத் திரும்புவதா என்பது குறித்துப் பாதுகாப்புப் படையினர் தீவிரமாக ஆராய்ந்து வருவதாக இராணுவ வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.
கிளாலியைத் தொடர்ந்தும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கப் பெருமளவிலான இரா
(4-ம் பக்கம் பார்க்க)

## கிளாலியை காக்க 400 படை தேவை

(கொழும்பு)
கிளாலி கடற் பகுதியைக் கைப்பற்றியுள்ளதாகக் கூறும் இராணுவத்தினர் அதனைத் தொடர்ந்தும் தக்க வைக்க போதிய படையினர் இல்லாதிருப்பதாக இராணுவ வியாக்கியர்கள் நேற்று கொழும்பில் தெரிவித்தனர்.
(4-ம் பக்கம் பார்க்க)

### ஹெலி நோட்டம்

(அரியாலை)
நேற்று மாலை 5-00 மணிக்கும், பின்பு 6-40க்கும் ஹெலி ஒன்று வட்டமிட்டு யாழ் நகரைச் சுற்றி நோட்டமிட்ட பின்பு பலாலியை நோக்கி சென்றது. நேற்று முழுநாளும் விமான நடமாட்டம் அதிகரித்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. [59-இ]

## பலாலியில் அவசர மாநாடு ஹமில்டனும் பங்குபற்றினார்

(கொழும்பு)
'ஒபரேஷன் யாழ்தேவி' இராணுவ நடவடிக்கையில் ஏற்பட்ட பெரும் பலவீனம் குறித்து ஆராயவென பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் ஹமில்டன் பலாலி முகாமுக்கு வந்து படைத்துறை தளபதிகளை சந்தித்துள்ளதாக கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது.
அப் பத்திரிகை மேலும் கூறுவதாவது;
இராணுவத்தினரால் மேற்
(4ம் பக்கம் பார்க்க)

### தமிழ்ப் பகுதிகளில்
## இலங்கைப் படை தாக்குதல்; இந்தியா தொடர்ந்து மௌனம்

(சென்னை)
இலங்கையின் வடபகுதியில் தற்போது நடைபெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகள் குறித்து இந்தியா மௌனம் சாதித்து வருவதாக பி.பி.ஸி. தெரிவித்தது.
முன்னர் இலங்கையின் வடக்கு-கிழக்கில் நடைபெறும் சம்பவங்களுக்கு முக்கியம் கொடுக்கும் தமிழ் ஆங்கில
(4-ம் பக்கம் பார்க்க)

## யுத்த முனையில் 20,000 படையினர்!

(கொழும்பு)
'ஒபரேஷன் யாழ்தேவி' இராணுவ நடவடிக்கையில் 20,000 துருப்புக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும், போர் நடந்த இரண்டு நாட்களில் பெருமளவு படையினர் கொல்லப்பட்டது, இதுவே முதல் முறையாக உள்ளது என்றும் இராணுவ அதிகாரி ஒருவர் கூறியதாகக் கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று கூறியுள்ளது.
(4-ஆம் பக்கம் பார்க்க)

## 'ஒபரேஷன் யாழ்தேவி' வடக்கே தொடர்கிறது

(கொழும்பு)
வடபகுதியில் 'ஒபரேஷன் யாழ்தேவி' இராணுவ நடவடிக்கை தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக 'பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழு' தெரிவித்துள்ளது.
(4-ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத் தீர்வு அரசிடம் இல்லை

(கொழும்பு)
இலங்கைப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு என்பது அரசின் திட்டத்தில் இல்லைப் போல் தெரிவதாக பி. பி. ஸி. தெரிவித்தது.
அண்மையில் வெளிநாடுகளுக்கு சென்ற இலங்கை அமைச்சர்கள் அரசியல் தீர்வு
(4-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு எங்கும் பெரும் பாதுகாப்பு

(கொழும்பு)
கொழும்பு நகரிலும் தென் பகுதியில் ஏனைய முக்கிய இடங்களிலும் பாதுகாப்பு பெருமளவு பலப்படுத்தப்பட்டு வீதிச் சோதனைச் சாவடிகள் அதிகரிக்கப்பட்டு தீவிர சோதனை நடைபெற்று வருகிறது.
(4-ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவம் மீது சிங்களப் பெண் புகார்

(கொழும்பு)
கடமையில் சேவையிலிருந்து விலகிவந்த படையினர்கள் பலர் குருநாகல் மாவட்டத்தில் சிறுமிகள், இளம் பெண்களுக்குத் தொல்லைகொடுக்கின்றனர் என்று பி. பி. ஸி. சந்தேசிய வுக்கு ஒரு பெண்மணி கடித மூலம் தெரிவித்துள்ளார்.
(4-ம் பக்கம் பார்க்க)

## விளம்பரம்

"சுவடுகள்"

இந்த நாவலின்... மௌனங்களைப் பிளந்து ஒரு வார்த்தை வெடிக்கிறது. இருளைக் கிழித்து ஒரு விடியல் பிறக்கிறது...... சூரியனைத் தேடி ஒரு சுதந்திரப்பூ மலர்கிறது...... (இ-489)

பரபரப்பாகப் பேசப்பட்ட நாவல் "சுவடுகள்"

1991ஆம், 1992ஆம் ஆண்டுகளில் வெளிவந்த நாவல்களில் பரபரப்பாகப் பேசப்பட்ட நாவல் "சுவடுகள்" விற்பனையாகின்றது. பூபாலசிங்கம், ஸ்ரீகாந், கமலின் புத்தகசாலைகள் - யாழ்ப்பாணம். (இ-490)

"சுவடுகள்" நாவல் பதிப்புரையில்

இயல்வாணன் எழுதிய "சுவடுகள்" நாவலைப் படித்ததும் ஒரு புதிய பரம்பரை எழுத்தாளர் முளை விடுகிறார் என்று உதட்டுக்குள் தெரியாமல் உச்சரித்துக்கொண்டேன். மீரா. (சி-488)

வரும்முன் காப்போம் வாந்திபேதி அச்சுறுத்தல்

மிக்கவைற் உதவுகிறது. உடல் சுகாதாரத்திற்கு சாபோலிக் சேர்ந்த மெடிக்கேற்றற் சோப் கட்டி ரூபா 8/- மலசலகூடம், கழிவு நீர் வாய்க்கால் சுத்திகரிப்புக்கு நீமோல் போத்தல் ரூபா 70/- அன்னு லோப்பிச் கடைகளிலும் விற்பனையாகிறது மிக்கவைற் (ஏ-3471)


# யாழ். குடாவில் புற்றுநோய் இறப்பவர்தொகை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தற்பொழுது புற்றுநோயினால் பல நூற்றுக்கணக்கான மக்கள் இறந்துகொண்டிருக்கின்றனர். இருதய நோய்க்கு அடுத்தபடியாக அதிக இறப்புக்கள் புற்றுநோயினால் சம்பவிக்கின்றன. இவ்வாறு சுகாதாரக் கல்வி அதிகாரி திரு. செ. யோகேந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் "இந்த நோய் போதிய விளக்கமின்மையாலும், பயம் காரணமாகவும் வைத்திய ஆலோசனை பெறத்தவறும் காரணத்தினால் நோய் முற்றி ஆபத்தடையும் போது தான் எமது பிரதேசத்தில் அதிகமானோர் சிகிச்சைக்காக வைத்தியசாலையை நாடுகின்றனர்.

யாழ். குடாநாட்டில் தற்போது புற்றுநோய் பற்றிய கருத்தரங்குகள் பாடசாலை ஆசிரியர்கள், உயர் வகுப்பு மாணவர்களுக்கு நடத்தப்பட்டு வருகின்றன. பொது மக்களின் நலன் கருதி இந்தக் கருத்தரங்குகள் சனசமூக நிலையங்கள் ஊடாகவும் கிராம முன்னேற்றச் சங்கங்கள் ஊடாகவும் நடத்தப்பட்டு வருகின்றன என்றும் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் யாழ் குடாநாட்டில் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 1990ம் ஆண்டில் 611 பேரும், 1991ம் ஆண்டில் 585 பேரும் 1992ம் ஆண்டில் 842 பேரும் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக வடமாகாண புற்றுநோய் தடுப்புச் சங்க புள்ளி விபரங்களில் இருந்து தெரியவருகிறது. (162-ரீ

## தனிச்சிங்களத்தில் சுகாதார வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் உதவியுடன், சுகாதாரத் திணைக்களத்தினால் சுகாதாரக் கல்விப் பணியகம் வெளியிட்டுள்ள சுகாதாரக் கல்வி சம்பந்தமான வெளியீடுகள், அட்டைப் பட விபரங்கள், பணியாளர்களுக்கான கைநூல்கள் போன்ற முக்கிய பிரசுரங்கள் யாவும் தனிச் சிங்களத்தில் மட்டும் வெளியிடப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

யாழ். மாநகரசபை வைத்திய அதிகாரியின் முயற்சி காரணமாகச் சுகாதாரக் கல்வி சம்பந்தமான வெளியீடுகளை, யாழ். சுகாதார வைத்திய அதிகாரிப் பணிமனைக்குச் சுகாதாரக் கல்விப் பணியகம் அண்மைக் காலத்தில் அனுப்பியிருந்தது இந்த வெளியீடுகள் யாவும் தனிச் சிங்களத்தில் காணப்படுகின்றன -162

### மாநகரசபை எல்லைக்குள்

# கொலரா நோயினால் 52 பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

கொலரா நோயினால் இதுவரை 52 பேர் யாழ் - மாநகர சபை எல்லைக்குள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இவ்வாறு கொலராவினால் பாதிக்கப்பட்ட யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட 52 பேர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் தற்போது அனுமதிக்கப்பட்டுள்ளவர்களும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு குணமடைந்து திரும்பியவர்களும் அடங்குவார்கள் எனவும் தெரியவருகிறது. (157-ரீ)

# இருநூறு சைக்கிள்கள் கப்பலில் எடுத்துவரப்படும்

(பண்டத்தரிப்பு)

யாழ் மாவட்ட விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம் 200 சைக்கிள்களை கப்பல் மூலம் இங்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

இதற்கான அரசின் அனுமதி கிடைத்துள்ளதாகவும், விரைவில் இந்த சைக்கிள்களை கப்பல்மூலம் இங்கு எடுத்து வருவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சமாஜத் தலைவர் திரு ச. செல்வரத்தினம் தெரிவித்தார். இதேவேளை மேலுமொரு தொகுதி நீர் இறைக்கும் இயந்திரங்களும் அவற்றிற்கான உதிரிப்பாகங்களும் கப்பல்மூலம்வந்து சேரவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். 72 ரீ.


## தவறிவிட்டது

27-09-93 இரவலியில் பயணம்செய்த போது ஆண்களின் உடை, றேடியோ, சைக்கிள் டைனமோ, உடுப்புவைகள், பெறுமதிமிக்க பொருட்கள் அடங்கிய பிரயாண பை தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

வண. இ. தயாநிதி
மெதடிஸ்த குருமனை
புஸ்பா கொட்டேஜ்
புலோலி மேற்கு. புலோலி.
(சி-504)


# அல்லிப் ளை பகுதியில் வெளிச்சத்துடன் புகை

(யாழ்ப்பாணம்)

கடந்த இரு நாட்களாக அல்லிப்பளை, புலோப்பளை பகுதிகளில் வெளிச்சமும், அதனைத் தொடர்ந்து கரும் புகையும் வெளிவருவதைக் காணக் கூடியதாகவிருக்கிறது

இதேவேளை விமானக் குண்டு வீச்சு, ஷெல் வீச்சினால் இப் பகுதியிலுள்ள பல வீடுகள், வியாபார ஸ்தாபனங்கள் தீப்பற்றி எரிந்துள்ளன பெருமளவு வீடுகள் முற்றாக அழிந்துவிட்டனவாம்
163-இ)

## இலவச மீட்டல் வகுப்பு

(கொழும்புத்துறை)

தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த மாணவர்களுக்கு எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி. சீ. ஈ சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு தென்மராட்சி ஓய்வூதியர் சங்கத்தினர் இலவச கணித பாட மீட்டல் வகுப்புகளை நடத்தவுள்ளனர். -154

# தளபாட திருடர்கள் வகையாக சிக்கினார்கள்

(பருத்தித்துறை)

பாடசாலையில் கதிரை, மேசைகளை இரவுவேளையில் திருடிக்கொண்டு சென்ற இரு திருடர்கள் வகையாகச் சிக்கிக்கொண்டதனால் தமிழீழகாவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் இருந்தே இப்பாடசாலைத் தளபாடங்கள் திருடப்பட்டிருக்கின்றன இரவுவேளையில் பாடசாலைக்குள் நுழைந்துகொண்ட இவ்விரு திருடர்களும் சைக்கிளில் கதிரை மேசைகளைக் கட்டிக்கொண்டு வெளியேறி வீதியால் செல்ல முற்பட்டவேளையில் அவ்வீதியால் வந்த இளைஞர்களிடம் கையோடு சிக்கினர் 52-ரீ

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக முன்னாள் பதிவாளர் திரு. வி. எஸ். சிவராவின் அஞ்சலிக் கூட்டம் இன்று பி. ப. 3-00 மணிக்கு பதில் பதிவாளர் திரு இ முருகையன் தலைமையில் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. (சி)

0 0 0

(யாழ்ப்பாணம்)

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வின் விஞ்ஞான செய்முறைப் பரீட்சை தொடர்பான ஆலோசனைகள் வழங்க இருப்பதால், சகல விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர்களையும் இன்றுமுற்பகல் 10-30மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்துக்கு வருமாறு சமூகம் கொடுக்குமாறு கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். -இ

0 0 0

(யாழ்ப்பாணம்)

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வு விடைத்தாள் மதிப்பீடு இன்று பிற்பகல் 3-00 மணிக்குப் பின்னர் சேகரிக்க சேகரிப்பாளர்கள் இணைப்பு நிலையங்களுக்கு வருகைதர இருப்பதால் இணைப்பு நிலைய அலுவலர்கள் நிலையத்தில் நின்று உதவும் வண்ணம் தேர்வு ஆணையாளர் கேட்டுள்ளார். (இ)


இளைப்பாறிய அதிபர்

## திரு. செ. சோதிப்பெருமாள் ஜே பி.

அவர்களின்

# பாராட்டு விழா

காலம்: 1993-10-06ஆம் திகதி
புதன்கிழமை பிற்பகல் 5-30 மணி

இடம்: 'சரஸ்வதி கலையரங்கம்',
இணுவில் மத்தியகல்லூரி

தலைவர்: கலாநிதி சபா. ஜெயராசா அவர்கள்

பிரதம விருந்தினர்:

உயர்திரு. இரா. சுந்தரலிங்கம்
அவர்கள்
( வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் )

சமயப் பெரியார்கள், கல்வியலாளர்கள் உரைகளும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

ஊர்வலம்:

★ இணுவில் இசைக்கலைஞர்களின் தவில், நாதஸ்வர இசைகளுடன் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோவிலில் இருந்து பிற்பகல் 4-00 மணிக்கு ஆரம்பமாகும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செ. இலகுநாதன்
விழாக் குழு செயலாளர்.
இணுவில். இணுவில் மக்கள் சார்பாக
(ஏ-3473)


# சிறுவர் மத்தியில் அதிக போஷாக்கின்மை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுவர்கள் மத்தியில் போஷாக்கின்மை அதிகரித்து வருவதாக ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது

ஆரம்ப பாடசாலை மாணவர்கள் மத்தியில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் மூலம் 45 3 வீதமான பிள்ளைகள் போஷாக்கின்மைக்கு உட்பட்டிருப்பதும் 15 4 சதவீதமான பிள்ளைகள் மிகவும் கடும் போஷாக்கின்மைக்கு உட்பட்டிருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தேசிய மட்டத்தில் கடும் போஷாக்கின்மை 6 · 6 சதவீதமாக இருக்க இம் மாவட்டத்தில் 10 3 சதவீதமாக இருக்கின்றது இதே போல மீள ஏற்படும்போஷாக்கின்மை தேசிய மட்டத்தில் 2 · 8 சதவீதமாகவும், மட்டு மாவட்டத்தில் 7 சதவீதமாகவும் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (71-இ)

## கரும்பலகைமை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வெண்கட்டி, கரும்பலகைமை ஆகியவற்றிற்கு விண்ணப்பித்து இதுவரை பெற்றுக் கொள்ளாத சகல பாடசாலை அதிபர்களும் இன்று திங்கட்கிழமை காலை 9 மணி முதல் 12 மணிவரை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் அவற்றிற்குரிய பணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம் என்று யாழ் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இன்று இவைகளை பெற்றுக் கொள்ளத் தவறுவோருக்கு பின்பு வழங்கப்படமாட்டாதென்றும் அறிவித்துள்ளார். —ரீ

மணிவாக்கு

எவனால் மனத்தைக் கட்டுப்படுத்த முடிய வில்லையோ அவனுக்கு எதுவுமே கிடைக்காது.
— கிருஷ்ணபரமாத்மா

# நமது நோக்கு

## ஆசானின் புதிய பாடம்!

1983-ல் பயங்கர வாதத்தால் தமிழரின் உரிமைக்குரலை அடக்கிவிடலாம் என்ற நினைப்பில் இருந்த அரசுக்குப் புதிய கோணங்களிலிருந்து நெருக்கடிகள் தோன்றின.

தமிழர்கள் அஞ்சி அஞ்சி ஓடுவார்கள் இந்த அவனியின் மூலைமுடுக்கெல்லாம் என்று எண்ணிய அரசு புதிய சவால்களைச் சந்திக்கவேண்டியிருந்தது.

ஆயுதங்களை வாங்கிக் குவித்தும், படைபலத்தைப் பெருக்கியும் வெற்றிகள் கிட்டவில்லை. தோல்விகளே தொடர்ந்தன!

எனவே யுத்த தந்திரோபாயப் பாடங்களுக்குப் புதிய ஆசானைத் தேடியது.

இந்தவகையில், இஸ்ரவேலின் உதவி கிடைத்தது உலகறிந்த உண்மை!

நாடோடிகளாக நலிந்து கிடந்த யூதர்களுக்கு 1948 இல் நாடொன்று உருவாக்கப்பட்டது. மேற்கு நாடுகள் அன்பைச்சொரிந்தன. ஆயுதங்களைச்சொரிந்தன!

அமெரிக்காவோ, அந்த நாட்டின் பிறந்தநாள் பரிசுகளாகப் புதுவகை ஆயுதங்களையும் யுத்த விமானங்களையும் வழங்கி வந்தது.

இந்தப் பின்னணியில் வளர்ந்த இஸ்ரவேல், 1967ல் அராபிய நாடுகளோடு நடாத்திய போரில் வெற்றிபெற்றது.

எனினும் வெற்றிகளின் பின் நிம்மதியில்லை. காம்ப் டேவிட் ஒப்பந்தம்மூலம் எகிப்தோடு சமரசத்தை ஏற்படுத்தியது.

பின்னர், பலஸ்தீனியரின் பலத்த எதிர்ப்பினை அமெரிக்க உதவியோடு சமாளித்து வந்தது.

அண்மையில் மத்திய கிழக்கில் வல்லரசாக மாறிக்கொண்டிருந்த ஈராக்கின் காலையொடித்து மூலையில் முடங்கிக் கொண்டிருக்க வைத்த அமெரிக்காவின் தோழனே இஸ்ரவேல்!

இருப்பினும், இஸ்ரவேலின் புதிய பாடம் என்ன? வெற்றிகள் பல குவித்திருந்தும், உறுதிமிக்க நண்பர்களின் உதவிகள் இருந்தும், போரினால் நிரந்தர அமைதி காணமுடியாது என்ற பாடத்தைப் படித்திருக்கிறது.

அதனால் பாலஸ்தீனியருடன் கைகுலுக்கி அமைதிக்கான புதிய வழியை நாடியுள்ளது.

ஆயினும் திலத்தைக் கொண்டாட இருக்கும் இந்தவேளையில், அரசின் யுத்த வியூக ஆசானாக விளங்கிய இஸ்ரவேலின் புதிய போக்கினை, நோக்கினைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்!

# ★ சிங்கள மக்களிடம் வாக்குகள் பெறுவதற்கே யாழ்தேவி இராணுவ நடவடிக்கை

(கொழும்பு)

சிங்கள இராணுவம் பலமாக இருக்கின்றது. எம்மால் எதனையும் சாதிக்கமுடியும் என்பதை சிங்கள மக்களுக்கு உணர்த்துவதற்காகவே யாழ்தேவி என்ற இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் திரு சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

யுத்தத்தின் மூலம் இனப்பிரச்சினையை தீர்க்க முடியாது என்பதனை சிங்கள மக்கள் நன்கு உணர்ந்து விட்டார்கள். சிங்கள மக்கள் விரும்புவது கூட ஒரு அரசியல் தீர்வையேயாகும். சிங்கள மக்களுக்கு இராணுவம் கிளாலியைப் பிடித்துவிட்டது என்ற ஒரு கதையைக் காட்டுவதன் மூலம் சிங்கள மக்கள் மத்தியில் தாம் பிரபல்யம் ஆகலாம், வாக்குகளைப் பெற்றுவிடலாம் என்று சிறிலங்கா அரசு நம்புகிறது.

இது உண்மையிலேயே ஒரு அனுவபமான யுத்தம் இந்த யுத்தத்தின் மூலம் அரசு எதனையும் சாதிக்கப் போவதில்லை சிங்கள மக்களுக்கும் அல்லது வெளி உலகுக்கும் எமது இராணுவம் இன்னும் பலமாக உள்ளது. எம்மால் இன்னும் நீண்டதூரம் முன்னேற முடியும் என்ற ஒரு மாயையைத்தான் உருவாக்க முடியுமே தவிர வேறு எதையுமே இவர்களால் உண்மையில் செய்ய முடியாது.

இலங்கையில் இருக்கக்கூடிய இனப் பிரச்சினையின் அடிப்படையை உணரமுடியாத வரையில் அரசினால் இங்கிருக்கக்கூடிய பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது. தொடர்ந்து யுத்தம் நடைபெறுவது மேலும் மேலும் இழப்புக்களை உருவாக்குமே தவிர இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

—நி

# இராசிபலன்

4-10-1993

திங்கட்கிழமை

(தமிழுக்கு புரட்டாதி 18)

திதியை: காலை 6-23 வரை, பரணி: பிற்பகல் 2-10 வரை, இராகுகாலம்: காலை 7-32 முதல் 9-2 வரை. சுபநேரம்: நண்பகல் 12-2 முதல் 1-32 வரை. கார்த்திகை விரதம்.

மேடம்: தெய்வ சிந்தனை, குடும்பத்தில் சுபகாரியம், தொழில் சிறப்பு.

இடபம்: மறைமுக விரோதம், கடன் பகைமை, தாழ்ந்த நிலை.

மிதுனம்: இல்லச் சிறப்பு, விருந்தினர் வருகை, பயண நன்மை.

கடகம்: வாக்கு வசீகரம், சகோதர உதவி, வயோதிபர் ஆசி.

சிம்மம்: வீண் சினம், பயனற்ற பிரயாசம், காரிய தடை.

கன்னி: அகங்காரம், புறம்சொல்லுதல், தொழில் கஷ்டம்.

துலாம்: பணவரவு, மாமனார் செலவு, புதிய செயல்பாடு.

விருச்சிகம்: நட்பு உறவு, தாய்ப்பாசம், வைத்திய செலவு.

தனுசு: மனவெறுப்பு, சஞ்சலனம், உறவினர் பிரிவு.

மகரம்: மனைவி துயர், சென்ற இடத்தில் பகைமை, அச்சம்.

கும்பம்: மனச் சந்தோசம், இனசன வருகை, தெய்வதரிசனம்.

மீனம்: கவனக் குறைவு, கைப்பொருள் இழப்பு, வெறுப்பு

— ஜோஸ்யர்.

# விமானத் தாக்குதல்களை கண்டித்து துண்டுப்பிரசுரம்

(யாழ்ப்பாணம்)

முல்லை. மாவட்டத்தில் மாத்தளன் பகுதியிலும் யாழ். தேவி இராணுவ நடவடிக்கையின்போதும் அப்பாவிப் பொதுமக்களின் மீதும் சிறிலங்கா ஹெலிகொப்டர்கள் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதல்களைக் கண்டித்து வன்னிப்பிரதேச பொது அமைப்புகள் கூட்டாகத் துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளன.

13 பொது அமைப்புகள் இணைந்து இத்துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டுள்ளன.

போர் நடவடிக்கை நடைபெறும் பகுதிகளில் திமிர்கொண்டு திரியும் இராட்சத விமானங்கள் அப்பாவிப் பொதுமக்கள் மீதும் குண்டு மழை பொழிகின்றன. இதனால் பல பொதுமக்கள் கொல்லப்பட்டும் படுகாயமடைந்துமுள்ள செய்தி எமது உள்ளங்களை வேதனை வைக்கிறது. இந்தச் சம்பவங்களை உடன் தடுத்து நிறுத்தும்படி சிறிலங்கா பேரினவாத அரசைக் கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு அந்தத் துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(நி)

# இணைப் பேராசிரியர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புவியியற்பீடத் தலைவரான செ. பாலச்சந்திரன் இணைப்பேராசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்

1968ம் ஆண்டு செப்டம்பர் மாதம் கொழும்பு பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக முதன் முதலில் நியமிக்கப்பட்ட இவர் 1982ம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகவும், 1991ம் ஆண்டு சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் ஒன்றுக்கும் பதவி உயர்த்தப்பட்டு பின் 1991ம் ஆண்டு தொடக்கம் புவியியற்பீடத் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார்.

25 ஆண்டுகள் பல்கலைக்கழகத்தில் சேவை புரிந்த இவர் வேலணை மத்திய கல்லூரியின் பழைய மாணவருமாவார்

-ம-கி

## பழனியில்

# சன நெரிசலில் சிக்கி பத்துப் பெண்கள் பலி

(சென்னை)

பழனியில் நேற்று முன் தினம் சனிவார் ஒருவர் ஏற்பாடு செய்திருந்த இலவச வேட்டி, சேலை வழங்கும் நிகழ்ச்சியில் கூட்ட நெரிசலில் சிக்கிப் பத்துப் பெண்கள் உயிரிழந்தனர்.

இச்சம்பவத்தில் 60 வயதிற்கு மேற்பட்ட பெண்களே இறந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(நி)

## யாழ். மாவட்டத்தில்

# அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் அத்தியாவசியப் பொருட்களுக்கு எதுவித தட்டுப்பாடும் இல்லை என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்

அண்மையில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக யாழ். நகரில் அத்தியாவசியப் பொருட்கள் சிலவற்றின் விலையில் சிறிது ஏற்றம் காணப்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

பொதுமக்கள் தங்கள் அன்றாட பாவனைக்குரிய அத்தியாவசியப் பொருட்களை கூட்டுறவுக் கடைகளில் நியாய விலைகளில் பெற்றுக்கொள்ளலாமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (162)

## யாழ். உதைபந்தாட்ட லீக்

# பொன்விழா போட்டிகள் இன்று முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் 50 வது ஆண்டு பொன் விழாவை முன்னிட்டு விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தும் உதை பந்தாட்ட நொக்கவுட்போட்டி இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகின்றது.

42 விளையாட்டுக் கழகங்கள் பங்கு பற்றும் இப்போட்டியில் 6 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு போட்டிகள் நடத்தப்படவுள்ளது இப்போட்டிகள் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்திலும் பாஷையூர் சென் அன்ரனிஸ் கழக விளையாட்டு மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

—நி

# ம.எண்ணெ பதுக்கல் அம்பலத்துக்கு வந்தது

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் விற்பனைக்கு வெளிவராத மண்ணெண்ணெய், கடந்த வெள்ளி பரல்களுடன் வெடித்துச் சிதறிய சம்பவம் யாவரையும் வியப்பிற்குள்ளாக்கியுள்ளது இத்தாக்குதலின்பின் மண்ணெண்ணெய் பல பரல்களுடன் மீட்கப்பட்டுமுள்ளது.

முதல் நாள் இப் பகுதிகளிலுள்ள எண்ணெய்க் கடைகளின் முன் வெற்றுப்போத்தல்களே அடுக்கிவிடப்பட்டிருந்தன. மண்ணெண்ணெய் வாங்க அலைந்து திரிந்தோருக்கு ஒரு போத்தல் மண்ணெண்ணெய் கூட இல்லை எனக்கூறிய இதே பகுதியிலிருந்து இவ்வாறு பெருந்தொகையான மண்ணெண்ணெய் பரல்கள் இருந்தமை தெரியவந்துள்ளது.

(155 சி)

# கடந்த செப்ரெம்பரில் மட்டும் 170 படையினர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா படைத்துறையினர் கடந்த செப்டம்பரில் மட்டும் 170க்கு மேற்பட்ட படையினரை இழந்துள்ளனர்.

இத்தொகையில் யாழ்.தேவி இராணுவ நடவடிக்கையின் படையினருக்கு ஏற்பட்ட இழப்பு மிக அதிகமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டு திருமலை மாவட்டங்களில் விமானப் படையினரும், பொலிசாரும் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில் கொல்லப்பட்டனர்.

மன்னாரில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போதும் படையினர் பலத்த இழப்புக்களைச் சந்தித்தனர். 1993-ம் ஆண்டு ஜனவரி மாதத்தின் பின் ஏற்பட்ட படையினர் தரப்பிலான அதிகளவு உயிரிழப்பு கடந்த செப்டம்பர் மாதத்திலேயே இடம்பெற்றுள்ளது.

(நி)

# இன்று

(யாழ்ப்பாணம்)

மஹா ரணியை முன்னிட்டு இன்று அலியாவளி ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தில் ஞான வைரவர் மூர்த்திக்கு விசேட அபிஷேகம் நடைபெற்று சுவாமி வெளிவீதி வருவார்.

மழை நீரைச் சேமிப்போம்

விளை பொருளைப் பெருக்குவோம்

# வடக்கு கிழக்கு இராணுவமுகாம்களில் 2,227 தமிழர் தடுத்துவைப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு இராணுவ முகாம்களில் கடந்த பல மாதங்களாக 2,227 தமிழ் இளைஞர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் பணிக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

பெருமளவு தமிழ் இளைஞர்கள் மட்டக்களப்பு மாவட்ட இராணுவ முகாம்களிலேயே தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் 982 பேரும், திருகோணமலையில் 141 பேரும், வவுனியாவில் 60 பேரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் பல தமிழ் இளைஞர்கள் பல்வேறு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டு சொல்லொணா துன்பங்களை அனுபவித்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தெற்கில் தடுப்பு முகாம்களிலும் பல நூற்றுக் கணக்கான தமிழர் வருடக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதும் தெரிந்ததே. (க-சி)

# அநுராதபுரத்தில் 81 சிப்பாய்களின் சடலம்

(கொழும்பு)

யாழ். குடாவில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் 'ஒபரேசன் யாழ். தேவி' இராணுவ நடவடிக்கையில் உயிரிழந்த படையினரின் சடலங்களில் சுமார் 81 சடலங்கள் அநுராதபுரம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

இந்த இராணுவ நடவடிக்கையில் 150க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டதாகவும் காயமடைந்த 114 பேர் கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

படுகாயமடைந்தவர்களை பராமரிப்பதற்கு போதிய மருத்துவர்களும், தாதிகளும் இல்லாததனால் பெருமளவு மருத்துவர்களும் தாதிகளும் அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு விமான மூலம் அனுப்பப்பட்டுள்ளனராம். (க-சி)

# சாவகச்சேரியை கைப்பற்ற பெரும் படையணி தேவை!

(கொழும்பு)

சாவகச்சேரியைக் கைப்பற்றும் நோக்கம் இராணுவத்தினருக்கு இருந்தால், 'ஒபரேஷன் யாழ்தேவி'யில் ஈடுபட்ட படையினரைவிடப் பல ஆயிரக்கணக்கான படையினர் மேலதிகமாகத் தேவை என முன்னாள் விமானப் படைத் தளபதி ஹரி குணதிலக கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், சாவகச்சேரிப் பகுதியைக் கைப்பற்றுவதற்கு பெரும் திட்டம் ஒன்று தேவை. இல்லையேல் அது பெரும் எதிர்விளைவையே ஏற்படுத்தும் என்றார்.

இலங்கையில் இனப் பிரச்சினையே உள்ளது. இதற்கு அரசியல் தீர்வே அவசியமானது. இராணுவத் தீர்வுக்கு அரசு முற்பட்டால், 2000ம் ஆண்டுக்கு முன் 'தமிழீழம்' நிச்சயம் பிறக்குமெனத் திரு. ஹரி குணதிலக எச்சரித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. -சி

# இந்திய நில நடுக்கம்: 700 கிராமங்கள் முற்றாக அழியுண்டன

(புதுடில்லி)

மஹாராஷ்டிர மாநிலத்தில் சில தினங்களுக்கு முன் ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் 700க்கும் மேற்பட்ட கிராமங்கள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

மேலும் மஹாராஷ்டிராவின் சில பகுதிகளில் மீண்டும் இலேசாக நிலஅதிர்வு ஏற்பட்டதாகவும் ஆயினும் சேதம் எதுவும் ஏற்பட்டதாக தகவல் இல்லை.

35,000க்கும் மேற்பட்டோர் இந்நிலநடுக்கத்தினால் கொல்லப்பட்டதும் தெரிந்ததே. (க-சி)

# 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' இலங்கை-அமெரிக்க ஒப்பந்த விபரம் இன்று வெளியாகும்

(கொழும்பு)

இரணவிலவில் நிர்மாணிக்கப்பட்டு வரும் 'வொய்ஸ் ஒவ் அமெரிக்க வானொலி நிலையம் பற்றிய இலங்கை அரசாங்கத்துக்கும் அமெரிக்க அரசாங்கத்துக்கு மிடையில் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தின் விபரங்கள் இன்று பொதுமக்களின் பார்வைக்காக வெளியிடப்படவுள்ளன.

இந்த ஒப்பந்தத்தில் 1983-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 9-ம் திகதி அமைச்சர் ஹமீதும் காலஞ்சென்ற அமெரிக்கத் தூதுவர் ரீட்ஸும் கையெழுத்திட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-சி)

## கருணாநிதியைக்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பறித்து நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வை. கோபாலசாமியிடம் ஒப்படைப்பதற்காகவே விடுதலைப் புலிகள் தம்மை கொலை செய்ய திட்டமிடுவதாகவும் திரு. கருணாநிதி கூறியுள்ளார்.

தமிழக பாதுகாப்பு அதிகாரிகள் கூடுதல் பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்ளுமாறு தனக்கு ஆலோசனை கூறியிருப்பதாகவும் அவர் கூறினார்.

ஏற்கனவே தங்களைக் கொலைசெய்ய புலிகள் திட்டமிட்டுள்ளதாக தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா, தமிழக காங்கிரஸ் தலைவர் திரு. வாழப்பாடி ராமமூர்த்தி, ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியசுவாமி போன்றோர் அடிக்கடி கூறிவருவதும் தெரிந்ததே. (சி)

# சிறுவன் சடலம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் சூட்டுக் காயங்களுடன் ஒப்படைக்கப்பட்ட இனம் தெரியாத சிறுவனின் சடலம், நேற்று அடையாளம் காணப்பட்டது.

தெற்பெலி பண்டிதர் குடியிருப்பைச் சேர்ந்த தவராசா கமலதாசன் (வயது 13) என அடையாளம் காணப்பட்ட இச்சிறுவன், கிடைத்தெருவில் இடம்பெற்ற ஹெலித் தாக்குதலில் மரணமானார் என்பதும் தெரிந்ததே. -சு-சி

## கிளாலியைக் காக்க

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிளாலி பகுதியை தொடர்ந்தும் படையினர் தக்க வைக்க வேண்டுமானால் குறைந்தது 400 படையினராவது தேவை. ஆனால் தற்போதைய நிலையில் 400 படையினரை கிளாலிப் பகுதிக்கு அனுப்புவது என்பது இராணுவத்தினரால் முடியாத ஒன்றாகவும் அந்த விமர்சகர்கள் கூறியுள்ளனர்.

தற்போதைய யுத்த நிலை அரச படைகளுக்கு ஒரு சிக்கலான நிலையை தோற்றுவித்திருப்பதாகவும் கூறப்படுகிறது. (சி)

## பலாலியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளப்பட்ட பாரிய இராணுவ நடவடிக்கையான 'ஒபரேஷன் யாழ்தேவி' இராணுவ நடவடிக்கை 25 நாட்களுக்கு மேற்கொள்ளப்பட திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும் இந்த இராணுவ நடவடிக்கையில் திட்டமிட்டபடி இராணுவத்தினர் வெற்றி கொள்ளமுடியாது இருந்ததுடன் பலத்த பின்னடைவையும், இழப்புக்களையும் சந்தித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-சி)

## இரு கவசவாகனங்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி பகுதிகளிலிருந்து கவச வாகனங்களுடன் முன்னேற முயன்ற படையினர் மீதே புலிகள் கடும் தாக்குதலைத் தொடுத்ததுடன், கண்ணிவெடித் தாக்குதலையும் நடத்தினார்களாம்.

இத்தாக்குதலில் இரண்டு கவச வாகனங்கள் அழிக்கப்பட்டது குறித்தும், ஐந்து படையினர் உயிரிழந்து, நால்வர் படுகாயமடைந்ததையும் இறிலங்கா அரசு ஊர்ஜிதம் செய்தது.

விமானப்படை, பீரங்கிப் படைகளின் உதவியுடன் இராணுவம் முன்னேறியபோதே புலிகள் இத்தாக்குதலை நடத்தியதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. -சி

## பல்கலைக்கழக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட ஒரு தொகுதி மாணவர்கள், பல்கலைக்கழகங்களில் சேர்த்துக்கொள்ளப்பட உள்ளனர்.

பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி இருந்தும், நீண்டகாலம் காத்திருக்கும் மாணவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒரு முயற்சியாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறதாம். அனுமதி பெறத் தகுதியுள்ள மாணவர்கள் விண்ணப்பப் படிவங்களை இம்மாதம் 18ம் திகதி முதல் அடுத்தமாதம் 19ம் திகதிவரை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப முடிவு திகதி அடுத்த மாதம் 22ம் திகதியாகும்.

பல்கலைக்கழக அனுமதிக்கு தேவையான ஆகக்குறைந்த வெட்டுப்புள்ளி விபரங்களை கல்வி உயர்கல்வி அமைச்சு அடுத்த வார இறுதிக்குள் அறிவிக்கும். புதிதாக சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களும் 1992ம் ஆண்டு க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையின் அடிப்படையில் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களும் தமது பல்கலைக்கழக கல்வியை அடுத்த கல்வியாண்டில் ஆரம்பிப்பார்கள். -சி

# சட்டவிரோத மின்பாவனை தண்டம் ரூ. 87 லட்சம்

(கொழும்பு)

தெற்கில் அண்மையில் சட்டவிரோத மின்பாவனை மேற்கொண்ட தொழிலதிபர் ஒருவர் வகையாக மாட்டிக்கொண்டதை அடுத்து அவருக்கு மின்சார சபை தண்டப் பணமாக 87 லட்சம் ரூபாவை விதித்துள்ளது.

இத்தொகையில் 5 லட்சம் ரூபாவை உடனடியாகச் செலுத்திய அந்தத் தொழிலதிபர், மிகுதித் தொகையை மாதாந்தத் தவணையில் செலுத்தவுள்ளாராம்.

தெற்கில் சட்டவிரோத மின்பாவனை பெருமளவு அதிகரித்துள்ளதை அடுத்து, திடீர் சோதனைகளை மின்சார சபை நடாத்திவருகிறது. கடந்த ஒரு வாரத்தில் 600 சட்டவிரோத மின்பாவனையாளர் பிடிபட்டுள்ளனர். -சி

## ஆசிரியர் தினம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட ஆசிரியர்கள் நடாத்தும் உலக ஆசிரியர் தினவிழா எதிர்வரும் 6ம் திகதி மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் பண்டத்தரிப்பு கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெறவுள்ளது. —72

## ஒபரேஷன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புலோப்பளை, அல்லிப்பளை பகுதியில் கடும் மழையிலும் நேற்று முன்தினம் படையினர் தமது நடவடிக்கையில் ஈடுபட்டனராம்.

இப்பகுதியில் தொடர்ந்தும் படையினர் நிலைகொள்வதற்கேற்ப தமது நிலைகளை படையினர் நன்கு பலப்படுத்தி வருவதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (சி)

## கிளாலிப் பகுதியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ணுவப் பலம் தேவை. புலிகளின் தாக்குதல், விரைவில் ஆரம்பமாகவிருக்கும் வடமேற்குப் பருவமழையால் ஏற்படக்கூடிய கஷ்டங்களும், கிளாலியில் இராணுவம் தொடர்ந்தும் நிலைகொள்வதா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்கு ஒரு காரணமாயிருக்கும்.

எனவே கிளாலிப் பகுதியில் இருந்து இராணுவம் வெளியேறும் என்ற ஊகங்கள் பெருமளவில் எழுந்துள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது. -சி

## தமிழ்ப்பகுதிகளில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரிகைகள் தற்போது செய்தி வெளியிடுவதுடன் மாத்திரம் நின்றுவிடுவதாகவும் இதனைக் கண்டித்து இதுவரை எந்தவொரு பத்திரிகையும் ஆசிரியர் தலையங்கம் எழுதவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக தி. மு. க. வின் அதிகாரபூர்வ ஏடான 'முரசொலி' மற்றும் அதன் சார்புப் பத்திரிகையான 'தினகரன்' போன்ற செய்தி தாள்கள்கூட எவ்வித அக்கறையும் காட்டவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. மேற்படி பத்திரிகைகள் முன்னர் இலங்கை தமிழர் விடயம் பற்றி காரசாரமான தலையங்கங்கள் எழுதி வந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

வழக்கமாக விடுதலைப்புலிகளை ஆதரிக்கும் ஈழம் சார்பு அமைப்புகள்கூட இம்முறை இலங்கை தமிழர் விடயத்தில் எதுவித அக்கறையும் காட்டவில்லையாம்.

மேலும் இலங்கை ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை, பயங்கரவாதப் பிரச்சினையே நிலவி வருகின்றது என்று கூறி வந்தமைக்குக்கூட இந்திய தரப்பிலிருந்து எதுவித பிரதிபலிப்புகளும் தெரிவிக்கப்படவில்லை என்றும் பி. பி. ஸி தெரிவித்தது. (க-சி)

## சமாதானத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றி பேசினாலும் இந்தப் பேச்சுக்கு முடிவு காணும் ஆக்கபூர்வ அரசியல் முயற்சிகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

புதிய ஜனாதிபதி விஜயதுங்க வெளியிட்ட கடும் போக்கு கருத்துக்கள் இராணுவத்தீர்வு தான் கடைப்பிடிக்கப்படுகிறது என்பதை சேடிகாட்டுவதாக பி. பி. ஸி. தெரிவித்தது. -சி

## கொழும்பு

1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் தற்கொலைப்படை நாட்டின் அரசியல் அமைப்பின் மையப் பகுதியை குறிவைத்து தாக்குதல் நடாத்தலாமென்ற பெரும் அச்சமே இதற்கு காரணமாம்.

இதன் முன்னோடியாக கொழும்பில் தொடர்ந்தும் தமிழர் பெருமளவில் கைது செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## யுத்த முனையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இராணுவ நடவடிக்கைக்குச் சகல யுத்த விமானங்களும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டன என்று விமானப்படை அதிகாரி ஒருவர் கூறியதாகவும், கிழக்கு மாகாணத்தில் இருந்து இந்த இராணுவ நடவடிக்கைக்குப் பெருமளவு படையினர் அனுப்பி வைக்கப்பட்டனர் என்றும் இராணுவ அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி அந்தப் பத்திரிகைச் செய்தி மேலும் குறிப்பிடுகின்றது. -ம-சி

## இராணுவம் மீது

1ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் 18 வயதுக்கும் 25 வயதுக்கும் உட்பட்ட இளைஞர்களாக இருப்பதோடு இவர்களில் பலர் படையினரென்றும் அடையாளம் காணக்கூடியதாக இருக்கின்றதென்றும் அந்தப் பெண்மணி கடித மூலம் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பேச்வழிகள் பெற்றோர்களுக்கும், பொலிஸாருக்கும் ஒரு சவாலாக இருக்கின்றார்கள் என்றும் மேலும் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். -ம-சி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 4 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licenee Number B/10 336/Bı